செ(கு).எண். 52 நாள் 03.04.10

# செய்தி வெளியீடு – 3.4.2010

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தி

நாளை (4.4.2010) ஈஸ்டர் திருநாள்! கிருத்துவ சமுதாய மக்கள் இந்நாளைத் துன்பம் அகன்று இன்பம் பூத்த திருநாள் எனப் போற்றுகிறார்கள்.

கிருத்துவ சமயம் பொதுவாகத் தொண்டு சமயம் என மதிக்கப்படுகிறது. அது சகிப்புத் தன்மையை மனித சமுதாயத்தில் வலியுறுத்துகிறது. இயேசு பெருமான் அன்பு, பொறுமை, கருணை, இரக்கம் ஆகிய பண்புகளைப் போதித்தார். எப்பொழுதும் தீமைகள் நெருங்காதவாறு விழிப்புடன் இருக்கவேண்டும் என்று கூறிய இயேசுநாதர், "ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்." என்று அறிவுரை பகர்ந்தார்; "தாம் பிறரிடம் எதிர்பார்ப்பதையே தானும் பிறருக்குச் செய்ய வேண்டும்" என்றும் போதித்தார். இது, இயேசுநாதர் போதித்த முதன்மையான நீதிகளில் ஒன்றாகும். கிருத்தவ சமயத்தால் "பொன்விதி" எனப் போற்றப்படும் இந்த நீதியை மனித சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டி நெறி எனக் கிருத்தவர்களும், கிருத்தவர் அல்லாதவர்களும் கருதுகின்றனர்.

மேலும், இயேசு பெருமான், "அருகிலுள்ளவர்களை நேசிக்க வேண்டும் என்றும், பகைவர்களை வெறுக்க வேண்டும் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுக்குக் கூறுகிறேன்; உங்கள் பகைவரை நேசியுங்கள்; உங்களைச் சபிப்பவர்களுக்கு நீங்கள் ஆசி கூறுங்கள்; உங்களை வெறுப்பவர்களுக்கு நீங்கள் நன்மையே செய்யுங்கள்;".

–எனக் கூறித் தூய மனிதநேயம் தழைக்கவும் வழிகாட்டினார். இத்தகைய அருளாளரை – புனிதரை வணங்கி மகிழ்ந்து கொண்டாடும் இந்நன்னாளில் தமிழகத்தில் வாழும் கிருத்தவ சமுதாய மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.